★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 12உ வெள்ளி (24-2-56) ★ ★ வெளியூர்: மாசி 13உ சனி (25-2-56) [இதழ் 216

40000 முறைகள் இரயில் நிறுத்தம்

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களின் போது சுமார் 40-க்கும் மேற்பட்ட இரயில் பெட்டிகள் பாழாக்கப்பட்டன.

1955-ம் ஆண்டில் மட்டும், அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து இரயில்கள் 40,000 முறை நிறுத்தப்பட்டன. அதிகமாக இரயில்கள் நிறுத்தப்பட்டது வடகிழக்கு, கிழக்கு இரயில்வேக்களில்தான்.

—இந்தத் தகவலை இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் சபையில் தாக்கல் செய்த பேசுகையில் மந்திரி லால் பகதூர் சாஸ்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

அர்த்தால் அளித்திடும் முதல் பலன்

எல்லைத் தொல்லை தீர்க்கப்படும்

நேரு பண்டிதர் 'ஜாடை' காட்டுகிறார்

தேவிகுளம்-பீர்மேடு பகுதிகளில் வாக்கெடுப்பு

சாத்தியம்தான் என்று சமரசம் பேசுகிறார்

தமிழ்நாடு அர்த்தால்பற்றி நேரு

பார்லிமெண்டில் பண்டிதர் புதிய 'பாணி'

சர்வகட்சிக் கூட்டணி முயற்சி வீண்போகவில்லை

சென்னை சர்க்கார் என்ன செய்யும்?

பிப். 20—சர்வகட்சிக் கூட்டணி நடத்திக் காட்டிய வெற்றிகரமான அர்த்தால், வீண்போகவில்லை.

பதட்டமாகப் பக்தவத்சலம் பேசினாலும், 'ஐயோ! பாவம்!' என்று பரிதாபம் காட்டிச் சில பெரியவர்கள் ஏளனம் செய்தாலும், 'காலித்தனத்துக்குப் பெயர் அர்த்தாலா?' என்று சில கருத்துக் குருடர்கள் ஏசினாலும், பிப் 20 அர்த்தாலின் வெற்றி, யாருடைய கண்களைத் திறக்க வேண்டுமோ அவருடைய கண்களைத் திறந்திருக்கிறது—சிறிதளவு!

'சர்வதேசப் பிரச்சினைகளின் முன்பு இந்தச் 'சலசலப்பு' பற்றி எல்லாம் அவர் கவனிக்க முடியுமா'—என்று இங்குள்ள 'தொண்டரடிப் பொடியாழ்வார்கள்' பேசுகின்றனர்; ஆனால் பார்லிமெண்டில், குடியரசுத் தலைவரின் பேருரை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் பண்டித நேரு சென்னை அர்த்தால் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்

வழக்கமாக வாரி வீசுவாரே—'பைத்தியக்காரத்தனம்; காட்டுமிராண்டித்தனம்' என்ற சுடுசொற்கள்—அதுபோல் அல்ல!

முற்றிலும் புதிய பாணியில் பேசி இருக்கிறார்!

சமரசம் உபதேசிக்கும் சாந்த புருடராகக் கோலம் காட்டி இருக்கிறார்!

'எல்லைத் தொல்லைகள், அற்பமானவை' என்று ஒதுக்கித் தள்ளிவிடவில்லை.

'இராஜ்ய சீரமைப்புப் பிரச்சினைகளைவிட முக்கியமான வேறு பிரச்சினைகள் உள்ளன' என்பதை எடுத்துக் காட்டிடும் நேரு, 'இராஜ்ய சீரமைப்புப் பிரச்சினை முக்கியமானது; மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருக்கிறது'—என்பதை ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்.

"சென்னை இராஜ்யத்தின் ஒரு கோடியில் உள்ள 500 சதுர மைல் அளவுள்ள ஒரு துண்டுக்காகத் தகராறு இருக்கிறது," என்று, தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

"இதற்காகச் சென்னையில் ஒரு அர்த்தால் நடத்தி இருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'முட்டாள்கள்' இப்படிச் செய்தார்கள்—என்று கூறவில்லை; மாறாக, 'ஜாடை' காட்டுவதுபோலப் பேசுகிறார்.

"தகராறுக்குரிய எல்லைப் பகுதியில், அந்த மக்களுடைய கருத்தின்படி முடிவு காண்பது என்பது எனக்கும் விருப்பம்தான்," என்று 'ஜாடை' காட்டிவிட்டு, "ஆனால், இதுபோன்ற பிரச்சினைகளுக்காகப் பலாத்கார ஆர்ப்பாட்டம் கூடாது; பால் மணம் மாறாத சிறுவர்களையும், சிறுமிகளையும் இதற்குப் பயன்படுத்தக்கூடாது" என்று 'பரிவு' காட்டுகிறார், பேரப் பிள்ளைகளிடம்!!

"இராஜ்ய சீரமைப்பு விடயத்தில் தகராறுகள் ஏற்பட்டுள்ள இடத்தில், **வாக்கெடுப்பு** நடத்துவது சாத்தியம்தான்" என்று நேரு தெரிவிக்கிறார்.

பார்லிமெண்டில், பண்டித நேரு இவ்விதம், 'வாக்கெடுப்பு' சாத்தியம்—என்று தேவிகுளம்—பீர்மேடு போன்ற எல்லைப் பகுதிகள் குறித்துத்தான் கூறுகிறார்.

இந்த அளவில், சர்வகட்சிக் கூட்டணியின் முதல் முயற்சியான அர்த்தால், வெற்றி தருகிறது.

இனி, நேரு பண்டிதர் மாறிவிடாமலும், 'ஜாடை' பேசுவதுடன் நின்றுவிடாமலும் 'வாக்கெடுப்பு' திட்டம் தந்து, எல்லைத் தகராறு தீர்க்கப்படுவதற்கான வழிகாண்பாரானால், எல்லைத் தொல்லை தீர்க்கப்பட்டுவிடும்.

இதனை, வலியுறுத்தி, 'வாக்கெடுப்பு'க்கு ஏற்பாடு செய்ய, சென்னை சர்க்கார் இனியாவது முன்வரலாம்.

மார்ச்சில் கூடும் சட்டசபை, சர்வ கட்சிக் கூட்டணி நடத்திய அர்த்தாலுக்குப் பிறகு மனமாற்றம் காட்டியுள்ள நேரு பண்டிதரின் 'வாக்கெடுப்பு' பேச்சு காற்றோடு காற்றாகிவிடாமல், ராஜதந்திரத்துடன் நடந்துகொண்டு, 'வாக்கெடுப்பு' மூலம் எல்லைப் பிரச்சினைத் தீர்க்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கலாம்.

சர்வகட்சிக் கூட்டணியும், அதற்கு ஆதரவளித்த பொது மக்களும், சென்னை சர்க்கார் இதையேனும் செய்யவேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள்.

வாக்கெடுப்பு மூலமோ, எல்லைக் கமிஷன் மூலமோ, தமிழகத்தின் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே, சர்வகட்சிக் கூட்டணி பணியாற்றத் தொடங்கிற்று என்பதும், அந்தப் பணியின் முதல் முழக்கமே பிப். 20 அர்த்தால் என்பதும் அன்பர்கள் அறிந்ததே.

'குழப்பங்களுக்கு காரணம் காங்கிரஸ் மேலிடமே!'

'பரிகாரம் தேட சகலகட்சி மாநாடு கூட்டுக'

மாநிலப் புது அமைப்புபற்றி மக்கள் சபை விவாதம்

"மாநில புது அமைப்பு குறித்த சர்க்காரின் கொள்கை பகுத்தறிவு பூர்வமானதாக இல்லை; 'தெலிங்கானா ஆந்திரத்துடன் இணையும்போது, 'விசால ஆந்திரம்' என்பதற்குப் பதிலாக 'ஐதராபாத்' என்று அழைப்பது என்று ஒரு யோசனை கூறப்பட்டதாக அறிகிறேன்; 'ஆந்திரம்' என்ற பெயர் இந்தியாவின் அரசியல் சட்டத்தில் இல்லாது போகுமானால் இந்திய சர்க்கார் ஆந்திர மக்களின் கடுங்கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் என்று எச்சரிக்கிறேன்"

என்று, டாக்டர் லங்காசுந்தரம் மக்கள் சபையில் பேசுகையில் சாடியிருக்கிறார்.

"பம்பாயில் நடைபெற்ற சம்பவங்களுக்குக் காரணம், காங்கிரஸ் மேலிடத்தார் தங்கள் தோழர்களையே அடக்கி ஆளமுடியவில்லை என்பதுதான்.

"மாஸ்டர் தாராசிங்கைத் தவிர, சர்க்கார் வேறெந்த காங்கிரசல்லாத கட்சித் தலைவர்களையும் இது விஷயத்தில், கலந்து பேசவில்லை; இப்போதும் ஒன்றும் காலந்தாழ்ந்துவிடவில்லை; சகல கட்சியினரும் அடங்கிய மாநாடு ஒன்று கூட்டி இது குறித்து யோசிக்கலாம்,"

என்றும் டாக்டர் லங்காசுந்தரம் இடித்துரைத்திருக்கிறார்.

அடுத்து பேசிய திருமதி ரேணு சக்ரவர்த்தி (கம்) "ஒரு மொழி மாநிலமான மேற்கு வங்கத்தில்—கல்கத்தாவில் வங்காளிகளுடன் மார்வாரிகள் ஒன்றுபட்டு வாழும்போது, பம்பாயில் மராட்டியர்களுடன் குஜராத்தியர் ஒன்றுபட்டு ஏன் வாழக்கூடாது?" என்று கேட்டார்.

"வங்கத்தையும் — பீகாரையும் இணைப்பது என்ற யோசனை 'ஒற்றுமை'யை உருவாக்காது; மாறாக, அது, பெரும் பிளவையும், ஆபத்தையும் உருவாக்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

'விசால ஆந்திரம்' அமையும்

பண்டித பந்த் அறிவிப்பு

புதுடில்லி, பிப். 23—

"'விசால ஆந்திரம்' பற்றிய பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற்று வருகின்றன; தொடர்புடைய எல்லோருடைய ஒப்புதலின் பேரிலும், 'விசால ஆந்திரம்' உருவாகும் என நம்புகிறேன்,"

என்று, பண்டித பந்த், ராஜ்யங்கள் சபையில், குடியரசுத் தலைவர் உரை மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விசாரணை நடத்த இயலாதாம்!

பம்பாய் கிளர்ச்சிகள் பற்றி விசாரணை நடத்தப்படாதென்றும், விசாரணை நடத்தினால் ஆத்திரமூட்டும் அறிக்கைகளும், கொதிப்படையும் பேச்சுக்களும்தான் நடக்கும் என்றும், அதன் விளைவாக கலவரச் செயல்கள் அதிகமாகும் என்றும் பம்பாய் சட்டசபையில் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சபையில் அர்த்தால் எதிரொலி

நேருவின் மனமாற்றம்

புதுடில்லி, பிப். 23—

"இந்தியாவைத் துண்டாடுவதற்கும், இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டைத் தனியாகப் பிரித்துவிடுவதற்கும் பகிரங்கமாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு கட்சியினர் சென்னை மாநிலத்தில் ஒரு அர்த்தாலுக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் ஏற்பாடு செய்தனர்; அவர்கள் பல கோஷங்களும், கூச்சலும் எழுப்பினர்.

"சென்னைக்கும் கேரளத்திற்கும் இடையில் ஒரு சிறிய பிரதேசத்திற்காக தகராறு இருந்துவருகிறது.

"அந்தப் பிரதேசம் அதை முடிவு செய்யட்டும்; அந்தப் பகுதி மக்களே அதுபற்றி முடிவெடுக்கட்டும்—என்ற திட்டம் நியாயமானதுதான்; ஆனால், ஒவ்வொருவரும் நிர்ப்பந்தம் செய்ய விரும்புகிறார்கள்.

"சென்னைக்கு அப்பால் உள்ள ஒரு 500 சதுர மைல் பரப்பளவுள்ள பிரதேசம் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்காக, சென்னையில் உள்ள சிலர், பலாத்கார வழிகள் மூலம் நிர்ப்பந்தம் செய்ய நினைக்கிறார்கள்,"

—என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில், குடியரசுத் தலைவர் உரை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24-2-'56 வெள்ளி

அவருக்கு இல்லையே, மான உணர்ச்சி!

பொது வேலைநிறுத்தத்தை முறியடிக்க முதலமைச்சர் என்ற முறையில் கனம் காமராசர் காட்டு ராஜா தர்பார் நடத்தி இருக்கிறார்.

அவர் ஆணைவழி இயங்கும் அரசாங்க அதிகாரிகளும், பொது வேலைநிறுத்தத்தின் அமைதியைக் குலைக்கவும், அர்த்தாலை மேற்கொள்ளக் கோரின சர்வ கட்சிகளுக்குக் களங்கம் கற்பிக்கவும், சிற்சில மனிதப் பண்பை இழந்து வெறித்தனமாக நடக்கத் துணிந்து இருக்கிறார்கள்.

கூடுமானவரை உயர்ந்த அதிகாரிகள், பொறுப்புணர்ந்து மனிதப் பண்புடன் பிரச்சினையை அணுகி இருக்கிறார்கள். ஆனால், சில குட்டி அதிகாரிகளோ, வரைகடந்து பேயாட்டம் ஆடி இருக்கிறார்கள்.

குட்டி அதிகாரிகளோடு, கொடும் வெறியாட்டம் நின்றுவிடவில்லை. பல ஊர்களில், கொடுவினை புரிய குட்டி அதிகாரிகளைத் தூண்டும் திருப்பணியில் உள்ளூர் காங்கிரஸ் சமூக விரோதிகளும் முழுமூச்சுடன் பங்குகொண்டு இருக்கிறார்கள்.

நாடாளும் முதலமைச்சராக மட்டும் காமராசர் இருக்கவில்லை. அவர் தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இன்றும் இருந்துவருகிறார். எனவே, அவர் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் ஒவ்வொரு ஊரிலும் உள்ள காங்கிரஸ் 'மணி'களை, வேலைநிறுத்தத்திற்கு எதிராக வேலை செய்யும்படி ஊக்காமல் இருக்க முடியுமா?

முதலமைச்சர் என்ற நிலையில் அரசாங்க அதிகாரிகளையும், காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் காங்கிரசில் உள்ள தீய சக்திகளையும், வேலைநிறுத்தத்தை எவ்வகையிலும் முயன்று முறியடித்துவிட வேண்டுமென்று கனம் காமராசர் தூபமிட்டிருக்கிறார். எசமான் சொற்படி ஆடவேண்டிய கட்டாயத்தில் உள்ள அவர்கள், அமைதியாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை இம்சித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

கனம் காமராசர் ஏவல்படி தங்களை மறந்து ஆடிய துக்கிரிகளின் பாதகச் செயல்களால், வேலைநிறுத்தம் முறிந்துவிடவில்லை — சிதறிவிடவுமில்லை — நின்றுவிடவுமில்லை. அவர்கள் எதிர்ப்பின் விளைவாக, சிற்சில ஊர்களில் சாதாரணமாக நடைபெறக்கூடிய வேலைநிறுத்தம்கூட, அதிக முறுக்குடனும், உற்சாகத்துடனும், பொதுமக்களின் ஒருமுகமான ஒத்துழைப்புடனும் வெற்றிகரமாக நடைபெற்று இருக்கிறது.

காங்கிரஸ் தலைவர் கூறிவிட்டாரே என்பதற்காக, தகுந்த தருணத்தில் தமிழர்களைக் காட்டிக்கொடுக்காத, தாங்களும் தமிழர்கள் என்பதைக் காட்டிக்கொள்ளும் தூய நினைப்புடன், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, அதை வெற்றிகரமாக்கியதில் பல ஊர்களில் காங்கிரஸ் கட்சியினருக்கும் சிறப்பான பங்குண்டு. அவர்கள் செயல், காங்கிரஸ் கட்சியிலும் நியாய புத்தி படைத்த தமிழர்கள், இன்றும் இருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகிறது; அவர்களைத் தமிழர்கள் என்றும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதிகாரிகளிலும் அத்தகு அருங்குணம் படைத்தவர்கள் இல்லாமல் இல்லை. முதலமைச்சர் ஆணை பிறப்பித்துவிட்டார் என்பதற்காகவே, அமைதியை வலுவில் கெடுக்கும் வக்கிரப் புத்திக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதைபொது வேலை நிறுத்தத்தின்போது விளக்கமாக சில அதிகாரிகள் காட்டிக்கொண்டு உள்ளனர். அவர்களுடைய நல்லெண்ணமும், நடுநிலை பிறழா நற்குணமும் கோணல் புத்தி படைத்த குட்டி அதிகாரிகளால் பின்பற்றத்தக்கவையாகும்,

'குடியை மறந்தும் குடுவையை மறக்கவில்லை' என்பது பழமொழி. அதைப்போன்றே விருதுநகர் விசித்திர புருஷர் முதலமைச்சராக முடி தாங்கிய பிறகுங்கூட, முன்னாள் இழிகுணத்தை மறந்து நடப்பவராகக் காணோம். இன்றும், தேனீ திருக்கல்யாணகுணம் படைத்தவராகவே கனம் காமராசர் இப் பொது வேலைநிறுத்தத்தின்போதும் நடந்து கொண்டிருக்கிறார் என்பதறிய தமிழ் மக்களாகப் பிறந்தோர் அனைவரும் வெட்கமும் வேதனையுந்தான் படுவர்.

கனம் காமராசரின் காட்டு குணப்போக்கிற்கு, பொது வேலை நிறுத்தத்தின்போது நிகழ்ந்த மூன்று சம்பவங்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அந்தச் சம்பவங்கள் முதலமைச்சரின் குணச் சிறப்பைச் சுட்டிக்காட்டுவதற்குப் போதுமானதாகும்.

சேலம்—ஆத்தூர் வட்டத்தில் உள்ள தம்மம்பட்டி என்ற சிற்றூரும், பொது வேலைநிறுத்தத்தில் பங்குகொண்டு இருக்கிறது. அந்த சிற்றூரில் எந்த ஒரு அரசியல் எதிர்க்கட்சியும் செயல்பட்டது கிடையாது. இருந்தாலும், அங்கு பொது வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற, அவ்வூரை அடுத்துள்ள சிற்றூரைச் சேர்ந்த அரசியல் அறிவு படைத்தவர்கள் முயன்றிருக்கின்றனர்.

அந்த ஊரில் என்றும் இல்லாது இருந்த தடை உத்தரவு திடீரெனப் போடப்பட்டிருக்கிறது. அதை அறிந்த தோழர்கள் மேலதிகாரியிடமிருந்து ஊர்வலத்திற்கும், பொதுக்கூட்டத்திற்கும் முன்கூட்டியே அனுமதி வாங்கி இருக்கிறார்கள்.

மேலதிகாரியின் கோரிக்கைப்படி, போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் அனுமதி நகலைச் சேர்ப்பிக்க மூன்று தோழர்கள் போலீஸ் நிலையத்துக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்து கொட்டடியில் தள்ளிப் பூட்டிவிட்டார் சப்-இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ண அய்யர் என்ற குட்டி சர்வாதிகாரி.

அனுமதி பெற்றிருக்கின்ற காரணத்தால், ஊர்வலமாகச் செல்ல அன்று மாலை ஏறத்தாழ எழுபது நபர்கள் முயன்று இருக்கின்றனர். அவர்களை வழிமறித்து, போதிய எச்சரிக்கை இல்லாமலும், வரிசைக்கிரமமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மனமில்லாமலும், துப்பாக்கியால் சுட உத்தரவிட்டிருக்கிறார் சப்-இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ண அய்யர்.

நால்வர் உடல்களை குண்டு துளைத்திருக்கிறது; வெட்டி முறிக்கப்பட்ட மரங்கள்போல் அவர்கள் தரையில் சாய்ந்து இருக்கிறார்கள்.

அவர்கள் உடல்களிலிருந்து கொப்பளித்துவந்த குருதி, மண்ணுக்குச் சிகப்பேற்றி இருக்கிறது.

இக்கோரக்காட்சியைக் கண்டும் காணாதவர் போல, குட்டி சர்வாதிகாரி கோபாலகிருஷ்ண அய்யர் போலீஸ் பரிவாரத்துடன் போலீஸ் நிலையத்திற்குத் திரும்பி இருக்கிறார். செயற்கரிய செய்துவிட்டோம் என்ற பூரிப்புடன்தான் நிலையம் திரும்பி இருப்பார்!

கள்ளக்குறிச்சியிலும் இதே கொடுமையை, அங்குள்ள குட்டி போலீஸ் அதிகாரி செய்து முடித்திருக்கிறார். மூவர் குண்டடிபட்டு குருதிகொட்டி உள்ளனர். இதுபற்றி தோழர் மதியழகன் கண்டுவந்த விளக்கத்தை வேறு இடத்தில் காண்க.

சட்டசபை உறுப்பினர் தோழர் ஏ.கோவிந்தசாமி அவர்கள்மீது கொள்ளை வழக்கு போடப்பட இருக்கிறது; சிறையிலிருந்து ஜாமீனில் வெளிவந்திருக்கிறார். அவர் விளக்கத்திலிருந்து வெளியாகும் உண்மைகள் எவை எவையோ.

தம்மம்பட்டி தெருவிலும், கள்ளக்குறிச்சி வீதியிலும் தமிழ் மக்களின் குருதி சிந்தப்படுகிறது. சிந்தச் செய்த 'பச்சைத் தமிழர்' சென்னை ஆட்சி பீடத்திலே கொலு வீற்றிருக்கிறார்! மானக்கேடான செய்திதான்—அவருக்கில்லையே அந்த மான உணர்ச்சி! பதவி பெரிதென்றல்லவா கனம் கொக்கரித்துக்கொண்டு இருக்கிறது!

'நிபுணர் குழுவை அமைக்காதே!'

மாநில சர்க்கார்களுக்கு மத்திய ஆட்சியினர் கட்டளை

நாடு முழுமைக்கும் இந்தியில் ஒரேமாதிரியான சொற்றொடர்களை உருவாக்குவதற்காகவும், பாடபுத்தகங்களைத் தயாரிப்பதற்காகவும், இந்திய சர்க்கார், 1950 அக்டோபர் மாதத்தில், விஞ்ஞான கலைச் சொற்கள் 'போர்டு' ஒன்றை அமைத்தனராம்.

'போர்டு' அமைக்கப்பட்டது பற்றி மாநில சர்க்கார்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட விடயமாக சொந்தமாக நிபுணர் குழு எதையும் அமைக்காதிருக்கும்படியும் போர்டுடன் ஒத்துழைத்த வரும்படியும், அத்துறையில் எற்கெனவே ஏதாவது வேலை செய்திருந்தால் அதை போர்டின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கும்படி அவை கேட்டுக்கொள்ளப்பட்டனவாம்!

தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி துப்பாக்கிப்பிரயோகம்

கே. ஏ. மதியழகன் சேகரித்த தகவல்கள்

சென்னை, பிப். 23—

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த தம்மம்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக விபரம் குறித்தும், கள்ளக்குறிச்சி துப்பாக்கிப் பிரயோக விபரம் குறித்தும் நிலைமைகளைக் கண்டறிந்துவர தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் பொதுச்செயலாளரால் பணிக்கப்பட்டேன். அதன்படி நேற்று, ஆத்தூர், தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களைப் பார்வையிட்டுக் கூட்டணியினருடனும், பொதுமக்களுடனும் கலந்து பேசினேன்; துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடங்களை நேரில் பார்த்தேன்; துப்பாக்கிக் குண்டுக்காயம் பட்டு மருத்துவமனையில் படுத்திருக்கும் வீரர்களையும் கண்டேன்; பிப். 20-ல், தமிழர்கள், சர்வகட்சி கூட்டணித் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நடத்திக்காட்டிய மகத்தான அணிவகுப்பை மாசுபடுத்துவதற்கு அதிகாரவர்க்கம் எத்தகைய அத்துமீறிய செயல்களில் இறங்கியது என்பதற்கு தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி சம்பவங்கள் எடுத்துக்காட்டுகளாய் அமைந்துள்ளதைக் கண்டேன்.

தம்மம்பட்டித் தோழர்கள் பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம் செய்து ஊர்வலம் நடத்துவதற்காக திடீரென்று விதிக்கப்பட்ட—சர்க்கார் அனுமதி வாங்கி ஊர்வலம் நடத்த வேண்டும்—என்ற தடையுத்தரவுக்கு இணங்க, 19-ந் தேதியன்று மூன்று தோழர்கள் டிப்டி - சூப்பிரண்டெண்டிடம் அனுமதி வாங்கி, தம்மம்பட்டி சப்-இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டிய பிரதியையும் நேரிலேயே எடுத்துக்கொண்டு பிப். 20-ந் தேதி காலை 7-30 மணிக்குத் தம்மம்பட்டி போலீஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர். இப்படி வந்த மூன்று தோழர்களாகிய ஜம்புலிங்கம் (சேர்) செம்பையா, சத்தியநாராயணன் (கம்) ஆகியோரைக் கைது செய்து போலீஸ் நிலையத்திலேயே காவலில் வைத்தனர்.

தோழர்கள், 'சம்மந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து ஊர்வலம் நடத்த அனுமதி பெற்றிருக்கிறோம்; எனவே, ஏற்பாடு செய்தபடி ஊர்வலம் அமைதியாக நடைபெறும்' என்று தெரிவித்தனர்; என்றாலும், சப்-இன்ஸ்பெக்டர் ஊர்வலத்தை நடத்துவதைக் கண்டிப்பாக அனுமதி மறுத்துவிட்டார்.

இருந்தாலும், மேலதிகாரியின் அனுமதிபெற்றிருந்த காரணத்தினால், மாலை 4 மணிக்கு, சுமார் 70 பேர் தம்மம்பட்டி தெருக்களில் ஊர்வலமாக அமைதியாக வந்துகொண்டிருந்தனர். போலீஸ் நிலையத்திற்கு 2½ பர்லாங் தூரத்தில் ஊர்வலம் வந்துகொண்டிருந்த தெருவிற்குக் குறுக்கேயுள்ள ஓர் சந்திலிருந்து துப்பாக்கியேந்திய போலீஸ் படையுடன் சப்-இன்ஸ்பெக்டர் அணிவகுத்து ஊர்வலத்தை மறித்து நிறுத்தினர். '3 நிமிடங்களில் கலைந்து ஓடிவிடுங்கள்; இல்லாவிட்டால் துப்பாக்கிப்பிரயோகம் செய்வேன்' என்று சொல்லிக்கொண்டே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உத்தரவிட்டார்; துப்பாக்கிக் குண்டுகள் வெடித்தன; கூட்டம் சிதறியது; நான்கு தோழர்கள் குண்டு பாய்ந்து, படுகாயமுற்றுக் கீழே விழுந்தனர். அவர்கள் பினவருமாறு:—1. ஜி ஏ. பெரியசாமி (தி.மு. க.) கூடமலை; 2. இராமலிங்கம் (தி. மு. க.) கூடமலை; 3. பொன்னுசாமி, நாகியம்பட்டி; 4. பாண்டுரங்கன் (தி. மு. க.) உலிபுரம்.

'அவர்கள் அருகில் எவரும் நெருங்கக்கூடாது' என்று எச்சரித்துவிட்டுப் போலீசார் இடத்தைவிட்டு அகன்றனர். நெடுநேரம் பிணங்கள்போல் மயக்கமுற்று இரத்த வெள்ளம் மண்ணில் புரள, அங்கேயே குண்டடிப்பட்ட தோழர்கள் கிடந்தனர்.

இவர்களில் இராமலிங்கம் என்ற தோழருக்கு இடது தொடையில் பின்னாலிருந்து குண்டு பொத்துக்கொண்டு போயிருக்கிறது; 'மயிரிழையில் மரணத்தின் பிடியிலிருந்து தப்பினர்,' என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஜீ. ஏ. பெரியசாமி என்பவருக்குக் குண்டு, தொடையில் கிழித்துக்கொண்டு உள்ளே சென்றுள்ளது

பொன்னுசாமி என்பவர் அரும்பு மீசைகூட முளைக்காத 14 வயது சிறுவர்; அவர்மீது பட்ட குண்டு வலது தொடையைத் துளைத்து இடது தொடையையும் துளைத்துக் காயப் படுத்தியுள்ளது.

பாண்டுரங்கன் என்பவருக்கு வலது கரத்தில் காயம்பட்டுள்ளது.

இவர்களின் அருகே மக்கள் யாரும் நெருங்கவில்லை.

அது நடந்த காலம் மாலை 5-30 மணி

பிறகு போலீசார் லாரியில் ஏற்றி 18 மைல்களுக்கப்பாலுள்ள ஆத்தூர் அரசாங்க மருத்துவமனையில் அவர்களை ஒப்படைத்தனர்; அங்கு அவர்கள் கைது செய்யப்பட்டு, இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் காவல் புரிய வைக்கப்பட்டுள்ளனர். யாரும் பார்க்க அனுமதிக்கப் படவில்லை.

நேற்று மாலை 1-மணிக்கு நானும், நண்பர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்களும் சப்-மாஜிஸ்திரேட் அனுமதி பெற்று, ஆத்தூர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கும் தோழர்கள் இராமலிங்கம், பெரியசாமி, பொன்னுசாமி ஆகியோரைப் பார்த்தோம்; அவர்கள் கோலத்தைக் கண்டு நான் பதறிப் போனேன். அந்தக் காயங்களைத்தான் 'தினமணி' 'இலேசான காயங்கள்' என்று தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருக்கிறது.

அவர்களும் நடந்த விபரம் முழுவதையும் விளக்கமாகச் சொன்னார்கள்.

60 அல்லது 70 பேர் உள்ள ஊர்வலத்தை, மிகுந்த அக்கரையெடுத்துக்கொண்டு, '750 பேர்கள் கொண்ட ஊர்வலம்' என்று பிரசுரித்திருக்கும் பத்திரிகைகளின் மற்றச் செய்திகளும் இப்படித்தான் இருக்கும் என்று தம்மம்பட்டி வட்டாரமே கண்டிப்பதைக் காதாரக் கேட்டேன்.

(4 பக்கம் பார்க்க)

தமிழர்கள் எழுச்சியுற்ற காட்சி!

நாடெங்கணும் பொது வேலைநிறுத்தம்

தமிழக சர்வ கட்சிக் கூட்டணியினர் வேண்டுகோளுக்கு இணங்க, டெல்லியின் அநீதிக்கு—நயவஞ்சகத்திற்கு—சதிக்கு எதிராகத் தமிழகமெங்கணும் பிப். 20-ந் தேதியன்று மகத்தான வெற்றியுடன் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

கடையடைப்பு, பஸ் போக்குவரத்து நிறுத்தம், பள்ளிகள், ஆலைகள் மூடுவிழா போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தின் எல்லா சிற்றூர்-பேரூர் நகரங்கள், பட்டிதொட்டிகளில் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. இட நெருக்கடி கருதி, அந்த நிகழ்ச்சிகளின் சாரத்தை மட்டும் இங்கு தருகிறோம்.

பல ஊர்களில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். முடிந்தவரையில் விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

மாதவரம் வட்டம்

மாதவரம் தொகுதியைச் சார்ந்த எருக்கஞ்சேரி மூலக்கடை, கொடுங்கையூர், கனக்கன் சத்திரம், புழல், செங்குன்றம், அழிஞ்சிவாக்கம், கிராண்ட்லயன் ஆகிய ஊர்களில் பொது வேலைநிறுத்தம்—கதவடைப்பு நடைபெற்றது

மூலக்கடைக்கு அருகில் உள்ள அடிசன் கம்பெனி, இந்தியா பிஸ்டன் கம்பெனி, புழலில் உள்ள பைலட் பேனா கம்பெனி. மாதவரத்திலுள்ள மைசிண்டியா கம்பெனி, கிளாஸ்பேக்டரி, மற்றும் தோல்பதனிடும் தொழிற்சாலைகள், நெல் அரைக்கும் ஆலைகள் அனைத்தும் மூடப்பட்டன; எல்லா ஓட்டல்களும், கடைகளும் மூடிக் கிடந்தன; விவசாயிகள்கூட தங்கள் வேலைகளைச் செய்யவில்லை

சர்க்கார் பஸ் தவிர மற்ற எல்லா பஸ்களும் ஓடவில்லை. சர்க்கார் பஸ்களும்போலீஸ்காரருடன் காலியாகவேதான் ஓடின. போலீஸ் அதிகாரிகள், நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் முதலாளிகளை மிரட்டியும், பஸ் ரூட் பர்மிட்டுகளை ரத்து செய்யப்படும் என்று பயமுறுத்தியுங்கூட அவர்களின் முயற்சி தோல்வியுற்றன.

பள்ளிக் கூடங்கள் ஒன்றுகூட நடைபெறவில்லை.

செங்குன்றத்தில், 'கடைகளைத் திறந்துவையுங்கள்—நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் — போலீசார் துணைகொண்டு' என்று கூறி காங்கிரஸ் தோழர்கள் எவ்வளவு முயற்சித்தும், அவர்களின் முயற்சி பலிக்காமல் போயிற்று.

இந்தப் பொது வேலைநிறுத்தத்தில் திராவிட கழகத் தோழரும் கலந்துகொண்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

பகல் 1 மணிக்கு தோழர் சி கே மாதவன் தலைமையில் சர்வ கட்சித் தோழர்கள் அடங்கிய ஊர்வலம் ஒன்று நடைபெற்றது ஊர்வலம் முடிவுற்றதும் 'உறுதிமொழி' வாசிக்கப்பட்டு எல்லோரும் உறுதிமொழி ஏற்ற பிறகு கலைந்து சென்றனர்.

மூலக்கடை ஜானகிராம் டாக்கீஸ், ராஜா டாக்கீஸ் ஆகிய தியேட்டர்களில் ஒரு காட்சிகூட நடைபெறவில்லை.

பலாத்காரம் இல்லாமல் அமைதியான முறையில் அர்த்தால நடைபெற்றுங்கூட தோழர்கள் ஏ. எம் சாமி (தி.மு.க.) தங்கராஜ், மற்றும் 2 தோழர்களையும் கைது செய்து அவர்கள்மீது வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

சாத்தூர்

இங்கு, காங்கிரஸ் பிரமுகர்களின் மூன்று கடைகளைத் தவிர, முழு கடையடைப்பு நடைபெற்றது.

தீப்பெட்டித் தொழிற்சாலை. பேனாமுள் தொழிற்சாலை, ஜின்னிங் பாக்டரி யாவும் மூடப்பட்டன. காங்கிரசுக் கோட்டையெனக் கூறப்படும் சாத்தூரில் சர்வகட்சியினரின் வேண்டுகோள் வெற்றி பெற்றது. திராவிடக் கழகத்தவர் கடைகள்கூட சர்வக் கட்சியினரின் வேண்டுகோளின்படி மூடப்பட்டுவிட்டன அர்த்தாலைத் தடுக்க காங்கிரசார் மேற்கொண்ட முயற்சி தோற்றது.

திருப்பூர்

பொதுவேலை நிறுத்தமும், கடையடைப்பும் சிறப்பாக நடைபெற்றது. பள்ளிக்கூடங்கள் ஒரு சில மாணவர்களைக்கொண்டு நடத்தப்பட்டன; சினிமாக் காட்சிகள் எதுவும் நடக்கவில்லை; மூன்று மில்களிலும் தொழிலாளர் வேலைக்குச் செல்லவில்லை, மொத்தமுள்ள 400 பனியன் பேக்டரிகளும் மூடப்பட்டன; ஜின்னிங் பேக்டரிகளும் மூடப்பட்டன. அர்த்தாலில், பருத்தி வியாபாரிகள் முழு பங்கு ஏற்றனர். எல்லா பெரிய சிறிய கடைகளும் உணவு விடுதிகளும் மூடப்பட்டன.

அன்று மாலை நொய்யல் நதி மைதானத்தில் கொடுமுடி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மக்கள், உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

தி. மு. கழக தொண்டர்களான தோழர்கள் பாலசுந்திரம், முத்து, பழனிசாமி ஆகியோரும், கம். தொண்டர் சுப்பையனும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

பேராவூரணி

20—2—56ல், முழு வேலை நிறுத்தமும், கடையடைப்பும் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது. பேராவூரணியைச் சார்ந்த குருவிக்கரம்பை, நாடியம், துறையூர் முடிச்சிக்காடு ஆதனூர், சங்கமங்கலம, சித்தாதிக்காடு, ஒட்டங்காடு, சித்திக்காடு, முதுகாடு முதலிய ஊர்களில் முழு அர்த்தால் செய்து, மேற்படி ஊர் தோழர்கள், விவசாயிகள் அனைவரும் பேராவூரணியில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்திலும் கலந்து கொண்டனர்

ஊர்வலம் சப்-ரிஜிஸ்திரார் ஆபிசிலிருந்து சந்தைப்பேட்டை வரையிலும் மிகவும் அமைதியாக நடைபெற்று அஞ்சல் நிலையத்திற்கு எதிரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தது கூட்ட முடிவில் சர்வ கட்சித் தோழர்களால் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

அர்த்தாலில் கலந்துகொண்ட மளிகைக் கடைகள், ஓட்டல்கள், நெல் அரைக்கும் ஆலைகள், தினசரி மார்க்கெட்டுகள் 158; அர்த்தாலில் கலந்துகொள்ளாத கடைகள்—இரண்டு காப்பி கிளப்புகள் உட்பட மொத்தம் 5; கலந்துகொள்ளாத கடைகளின் முன்பு 200 தொண்டர்கள் அமைதியான நின்று மறியல் செய்தனர்

இந்த நிகழ்ச்சிகள் நடைபெறு வண்ணம் தடை செய்ய தடையுத்தரவு போடுவதற்கு இவ்வூர் காங்கிரஸ்காரர்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி படுதோல்வியடைந்தது.

வீரசோழபுரம்

காலை 8 மணிக்கு, தி மு. கழகச் செயலாளர் தலைமையில், தோழர்கள் பலர் குறுக்கு ரோடு, மெய்க்காவல்புத்தூர் வரவைநல்லூர், வீரசோழபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று அமைதியான முறையில் அர்த்தால் மேற்கொள்ளுமாறு பல்வேறு தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டபின், அன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

மதுராந்தகம்

முழு அளவில் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. எந்தக் கடையும், ஓட்டல்களும் திறக்கப்படவில்லை. காலை 9 மணிக்கு சர்வ கட்சி ஊர்வலம் புறப்பட்டுச் சென்றது.

தி. மு. கழகச் செயலாளர் பி. சிவானந்தம், பஞ்சாயத்து போர்டு தலைவர் ஓ. என். துரைபாபு (சோ.) மற்றும் தி. மு. கழகத் தோழர்கள் சண்முகம், எம். ஈ. ரோஸ் ஆகியவர்களைக் கைது செய்து போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்; தோழர் பி. சிவானந்தத்தை மட்டும் லாரியில் ஏற்றி சோத்துப்பாக்கம் என்னும் ஊர்வரைக்கும் அழைத்துப் போய் வேறு லாரியில் போலீஸ் பாதுகாப்புடன் மதுராந்தகம் போலீஸ் நிலையத்திற்கு அனுப்பினர்.

11 மணி அளவில், தி. மு. கழகத் தோழர்கள் எம். கே. முஸ்தபா, ஏ. பி. ஆறுமுகம், ஆர். வரதராசன், குப்புசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

மதுராந்தகம் கோர்ட்டில் சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் கைது செய்யப்பட்ட எட்டுத் தோழர்களும் நிறுத்தப்பட்டபோது, சப்-மாஜிஸ்திரேட் அவர்கள், அனைவரையும் விடுதலை செய்து, 144 தடை உத்திரவை தண்டோரா மூலம் ஊரில் பிரகடனப்படுத்தச் செய்தார்.

சலகண்டபுரம்

கடையடைப்பும், வேலைநிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றன எவ்வித குழப்பமும் நிகழவில்லை.

ஓட்டல்கள் திறக்கப்படவில்லை; மில்கள் வேலை செய்யவில்லை; பெரும்பாலான நெசவாளர்கள் தொழில்புரியவில்லை. பொதுமக்களின் வேண்டுகோளுக்கும், உணர்ச்சிக்கும் மதிப்பளித்த பஸ்கள் பல ஓடவில்லை.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் பாதிப்பேருக்குமேல் பள்ளி செல்லவில்லை; காங்கிரஸ் கட்சியினரும், இளைஞர் காங்கிரசும் 'அர்த்தால் வேண்டாம்' என்று அறிக்கை வெளியிட்டும் மக்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை.

இலட்சிய முழக்கமிட்டவண்ணம் பெருத்த ஊர்வலம் நடந்தது; மாலை 7 மணிக்கு திரு. வி. க. திடலில், தோழர் எம். பி. ஒளி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிளர்ச்சியின் நோக்கத்தை விளக்கியும், ஒத்துழைத்த பொதுமக்களுக்கு நன்றிகூறியும், தோழர்கள் ப. கண்ணன், த. கந்தசாமி ப. செல்லப்பன், ர. கந்தசாமி ஆகியோர் பேசினர்.

தலைவரால் உறுதிமொழி படிக்கப்பட்டு எல்லோராலும் உற்சாகத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது

அய்யம்பாளையம்

பொதுவேலை நிறுத்தம் வெகு அமைதியாக நடைபெற்றது; தி மு கழக உறுப்பினர்கள் 50 பேர்வரை கைது செய்யப்பட்டு, நிலக்கோட்டை சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூடலூர்

இங்கு, அர்த்தால் அமைதியாக நடைபெற்றது. 19-ந் தேதியன்று தோழர் வி. சொக்கலிங்கம் என்பவர் போலீஸ் காவலில் வைக்கப்பட்டார். தி. மு. கழகத் தோழர்களான், பி. முஸ்தபா, என். பி கொடித்துரை இருவரையும் போலீசார் அழைத்துச் சென்று தடியடி செய்து விரட்டியடித்தனர்.

காங்கிரஸ்காரர்களின் எதிர்ப் பிரச்சாரம் தோற்றது; பொது வேலை நிறுத்தம் மகத்தான வெற்றி அடைந்தது.

ஆ. தெக்கூர்

பொதுவேலை நிறுத்தமும், கடையடைப்பும் மிகச் சிறந்தமுறையிலும், அமைதியாகவும் நடைபெற்றன.

காலை 8 மணிக்கு தி மு. கழகத் தோழர்கள் பல இடங்களில் நின்று, வேலை நிறுத்தம் வெற்றிகரமாய் நடத்தித் தரப்பட வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, காங்கிரஸ் செயலாளர்கூடத் தன் கடைகளை அடைத்து ஒத்துழைப்புத் தந்தார்.

திரு. விசாலட்சி பள்ளி மாணவர்கள் 880 பேர்களில் 775 பேர் வேலை நிறுத்தம் செய்ததும், 10 மணிக்கு இயக்கத் தோழர்களுடன் ஊர்வலத்தில் கலந்துகொண்டு முழங்கிய முழக்கங்களும் பாராட்ட வேண்டியதாயிருந்தது ஊர்வலத்தில் சுமார் 500 பேர் கலந்துகொண்டனர். ஊர்வலம் பகுத்தறிவுப் படிப்பகத்திலிருந்து புறப்பட்டு முக்கியத் தெருக்களின் வழியாய்ச் சந்தைத் திடலை வந்தடைந்தது மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பலர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஆசிரியலாருக்கு வற்புறுத்தப்பட்டதுடன், மன உறுதியும் எடுத்துக்கொண்டனர்.

இம்மாதிரி வேலை நிறுத்தம் பூரண வெற்றியுடன் இந்தக் கிராமத்தில் இதற்கு முன்னர் நடைபெற்றதில்லை.

வேட்டவலம்

சர்வ கட்சி சார்பில் அர்த்தால் நடைபெற்றது. இவ்வூர் வியாபாரச் சங்கத்தினரும் கடைகளை மூடி அர்த்தாலில் கலந்துகொண்டனர். உயர்நிலைப் பள்ளி மாணவர்களில் பெரும்பாலோர் பள்ளி செல்லவில்லை உள்ளூர் அரிசி மில்களும், பஸ்போக்குவரத்துச்சாதனங்களும் வேலை நிறுத்தம் செய்தன.

சர்வகட்சியினரும் மாலையில் அங்காளம்மன் கோவில் மைதானத்திலிருந்து புறப்பட்டு, நகர முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலமாக வந்து உறுதிமொழி மேற்கொண்டனர்.

கீழப்பூங்குடி

பொதுவேலை நிறுத்தமும், கடையடைப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது. சில காங்கிரஸ் தோழர்கள், அன்று காலை 9 மணி வரை அடைக்கப்பட்டிருந்த கடைகளைப் பலாத்காரமாகத் திறந்துவைக்க முயற்சித்தனர். போலீஸ் அதிகாரிகளின் தலையீட்டின் பேரில், காங்கிரஸ்காரர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்தனர். கடைகளும் அடைக்கப்பட்டன.

பண்ணுருட்டி

இங்கு முழு அர்த்தால் நடைபெற்றது. வியாபாரப் பெருமக்கள், சில்லரைக் கடைக்காரர்கள், ரைஸ் மில்கள், ஓட்டல்கள், பஞ்சாயத்து போர்டு மார்க்கெட், மணிலா மார்க்கெட், சினிமாக் கொட்டகைகள், இதர நிறுவனங்கள், வண்டிக்காரர்கள் வேலை நிறுத்தமும், கடையடைப்பும் செய்தனர்.

அன்று காலையில், தோழர் டி. பத்மநாபன் தலைமையில், 1,000 பேர் கொண்ட ஊர்வலம் நடைபெற்றது.

காங்கிரஸ்காரர்கள் ஹர்த்தால் வேண்டாமென நேரில் கூறியும், நோட்டீஸ் வெளியிட்டும் கூட, அன்று பூராவும் அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது.

திருவையாறு

மார்க்கெட், கடைகள், சினிமாக்கள் முழுமையும் மூடப்பட்டன அரசர் கல்லூரி மாணவர்கள் அர்த்தாலை மேற்கொண்டு ஊர்வலமாக சென்று. குறிப்பிட்ட இடத்தில் உறுதி மொழியை வாசித்துக் கலைந்தனர்.

திண்டுக்கல்

இன்று நடைபெற்ற அர்த்தாலில், திண்டுக்கல் சரித்திரத்திலேயே முதல் தடவையாக சந்தை கூடாமல் நின்றுவிட்டது. ஒருவர் கூட சந்தை கூடுமிடத்திற்கு வரவில்லை; மற்ற கடைகளும் மூடப்பட்டு, அமைதியாகப் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

மாலை 5-50 மணிக்கு காந்தி மைதானத்தில் தோழர் வீ. ஆர். வீராச்சாமி (பி. சோ.) தலைமையில் தோழர் பி. சமதர்மம் (தி. மு. க.) உறுதி மொழியை வாசிக்கப்பட்டு மக்களால் ஏற்கப்பட்டது.

குறிப்பு:— தோழர்கள் எ. சுப்பையா, அய்யாவு, எஸ். எ. ராஜன் ஆகியோர் உட்பட 7 பேர்களைப் போலீசார் அழைத்துச் சென்று அரை மணி நேரம் கழித்து அனுப்பிவிட்டனர்.

திருவெண்ணெய்நல்லூர்

பொதுவேலை நிறுத்தம் இங்கு அமைதியாக நடைபெற்றது. காலையில், தோழர்கள் இரா. பக்கிரிசாமி, தி. வ. அண்ணாதாசன் கைது செய்யப்பட்டனர். போலீசாரின் தடியடிப் பிரயோகமும் நடைபெற்றது. போலீசாரும், சர்க்கிளும் சேர்ந்து, மூடிய கடைகளைத் திறக்குமாறு வற்புறுத்தியதுமல்லாமல் நேரிலும் சென்று திறந்துவைக்க முயற்சித்தனர்.

மேல்பட்டாம்பாக்கம்

அரிசி மில் உட்பட இங்கு கடையடைப்பு அமைதியாக நடைபெற்றது.

திருக்கழுக்குன்றம்

அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது. கடைகள் எல்லாம் மூடப்பட்டது. பஸ்களும் ஓடவில்லை; திருக்கழுக்குன்றம் என்றும் கண்டிராத அளவில் ஊர்வலம் கட்டுப்பாடுடனும், கண்ணியத்துடனும் நடைபெற்றது. பள்ளிகள் திறந்திருந்தும் 100-க்கு 40 மாணவர்கள்கூட செல்லவில்லை. அன்று மாலை ஊர்வலமாகச் சென்று வன்னியர் சத்திரத்திற்கு எதிரில்கூடி சர்வ கட்சி கூட்டணியின் உறுதி மொழி வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த அர்த்தாலை, தி. மு. கழகத் தோழர்களே முன்னின்று நடத்தினர். காங்கிரஸ், தி. மு. கழகம் தவிர, வேறு கட்சிகள் இங்கு இல்லை.

பொறையார்

பொறையார், தரங்கம்பாடி, எருக்கட்டாஞ்சேரி ஆகிய ஊர்களில் உள்ள கடைகள், அரிசி மில்கள் யாவும் மூடிக்கிடந்தன; விவசாய வேலைகள் நடைபெறவில்லை; மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை; வாடகை வண்டிக்காரர்கள் வண்டிகளை விடவில்லை; பொதுவேலை நிறுத்தத்தின் அறிகுறியாக இங்கிருந்து காலை 4 மணிக்கு மாயூரம் செல்லப் புறப்படும் பஸ்ஸை செல்ல வேண்டாமென்று கூட்டணியினர் கேட்டுக்கொண்டனர்; அதன்படி பல பிரயாணிகள் செல்லவில்லை.

தோழர் சி ஜம்பு தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் மாலை 4 மணிக்கு தரங்கையிலிருந்து புறப்பட்டு எருக்கட்டாஞ்சேரி சென்று பொறையார் கடைத்தெருவில் முடிவுற்றது. பொறையார் இதுவரை கண்டிராத அளவில் அது விளங்கியது. தோழர் குஞ்சிதபாதம் நன்றி நவில, சி ஜம்பு கூட்டணியின் உறுதி மொழியைப் படிக்க, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொது வேலைநிறுத்தம் மிகவும் வெற்றியாய் முடிவுற்றது.

பொறையார் சமீபமுள்ள காட்டுச்சேரி, திருக்களாச்சேரி, ஆயப்பாடி, கூத்தூர், சாத்தனூர் ஆகிய கிராமங்களிலும் பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது.

மதியழகன் சேகரித்த தகவல்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 3 மணிக்கு தம்மம்பட்டிக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்தையும், மற்ற விபரங்களையும் பார்த்தேன். இரத்தம் தோய்ந்த மண்ணை போலீசார் அப்புறப் படுத்தியுள்ளனர். அந்த இடத்திற்கும்—போலீஸ் நிலையத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை; மூன்று வீதிகளுக்கு அப்பால் 16 அடிதான் அகலமுள்ள தெருவில் மனித வேட்டை நடந்துள்ளது. 'இதற்கு எவ்வித நியாயமும் கிடையாது' என்று ஊர் மக்கள் எடுத்துச் சொன்னார்கள்.

'சப் - இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணா அய்யர், தமக்குப் பிடிக்காத சில கொள்கைகள்மீது உள்ள வெறுப்பால், அண்மையில் சர்க்காரும், முதலமைச்சரும் பொதுவேலை நிறுத்தம் குறித்து விடுத்த அறிக்கைகளை போர்வையாகக் கொண்டு, அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்' என்று நான் சந்தித்த சகலரும் எடுத்துச் சொன்னார்கள்.

ஊர், புயலடித்து ஓய்ந்தது போல் காட்சியளிக்கிறது. மக்களும், தாய்மார்களும், 'காட்டரசனின் ஆட்சியில் வாழ்கிறோமா? நாகரீக நாட்டில் உள்ளோமா?' என்று பீதியடைந்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகச் செயலை நியாயமாக்குவதற்காக அருகாமையிலுள்ள உலிபுரம் என்ற ஊரில் இரவு 12 மணிக்கு விசேடப் போலீசாருடன், பூட்டிக் கிடந்த தி. மு. கழக அலுவலகத்தின் பூட்டை உடைத்துக்கொண்டு உள் நுழைந்து சோதனையிட்டுள்ளனர்.

பல விடுகள் தட்டப்பட்டு அங்குள்ள பெண்களிடத்தில் போலீசார் பல கேள்விகள் கேட்டுள்ளனர்.

சம்பந்தமில்லாத பலரை கைது செய்து ஆத்தூர் சிறையில் அடைத்துள்ளனர்.

நாமக்கல் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரும், மாவட்ட போலீஸ் உதவி அதிகாரியும் ஆத்தூரில் தங்கி விசாரணை நடத்திவருகின்றனர்.

தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த தோழர் பாஷாகான் ஆகியோரும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த மறுநாள் காலை தம்மம்பட்டி சென்று, மக்களுக்கு ஆறுதல் சொல்லி, அமைதியைக் கடைப்பிடிக்குமாறு வேண்டிக்கொண்டனர்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., ஆத்தூரிலேயே தங்கி சிறையிலிருப்பவர்கள் சம்பந்தமாயும், ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள் சம்பந்தமாயும் ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்து வருகிறார்.

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம், ஆத்தூர் வட்டாரத்தில் பெரியதோர் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நிர்வாக அதிகாரிகள் விசாரணை நடத்துகிறார்கள் என்றாலும், அதனால் உருப்படியான உண்மைகள் வெளியாகி, நீதி நிலைநாட்டப்படும் என்பதை மக்கள் நம்ப மறுக்கின்றனர்; ஏனெனில், இப்படிப்பட்ட எத்தனையோ விசாரணைகளை அவர்கள் கண்டிருக்கின்றனர்! அவ்விசாரணைகள், விளைவுச்குக் காரணம் கூறும் விளக்கவுரைகளாக முடிந்ததை மக்கள் அறிவார்கள். எனவே சர்க்கார் மாவட்ட நீதிபதிக்குக் குறையாத—ஓய்விலுள்ள அல்லது உத்தியோகத்திலுள்ள பாரபட்சமற்ற பகிரங்க விசாரணைக் குழுவை நியமித்து, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

★

தம்மம்பட்டியைப் போலவே தான் கள்ளக்குறிச்சியிலும் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

பிப். 20 அன்று அமைதியான கடையடைப்பு நடந்துள்ளது. மூடாமல் இருந்த ஒரு கடையின் முன் மறியல் செய்வது என்ற பேரால் கூடியிருந்த தொண்டர்கள் மீதும், மக்கள் மீதும் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்துள்ளனர்.

22 பேர்களைக் கைது செய்து அழைத்துச் செல்லும்போது, சப்-இன்ஸ்பெக்டர் மீது எங்கேயோயிருந்து விழுந்தகல்லைச் சாக்காகக் கொண்டு, கைது செய்தவர்களை என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் காணக் கூடியிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த தென் கீரனூர் தோழர் ஆறுமுகம் அவர்களும், தி. மு. கழகத்தைச் சேர்ந்த சிருவங்கூர் தோழர் கண்ணனும் படுகாயமுற்றனர். இருவரையும் கூட்டத்தினர் தூக்கிக் கொண்டு சென்று கள்ளக்குறிச்சி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

நேற்று இரவு 8-30 மணிக்கு தோழர்கள் ஆறுமுகத்தையும், கண்ணன் அவர்களையும் கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் பார்த்தேன். கைது செய்யப்பட்ட 22 தோழர்களும் சப்-ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது பெருஞ் செக்ஷன்களின் கீழ் வழக்கு ஜோடிக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது.

போலீசாரின் செயலுக்கு உள்ளூர் காங்கிரசைச் சேர்ந்த சிலரின் தூண்டுதலும், ஆதரவும் காரணம் என்று சொல்லப்படுகிறது. பொதுவாக கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் துப்பாக்கிப் பிரயோக அக்கிரமத்தையும், அதனைத்திரித்து வெளியிட்டுள்ள பத்திரிகைகளின் போக்கையும் குறித்து மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

'மாகாணம்' என அழைக்கலாமாம்!

புதுடில்லி, பிப். 22—

மாநிலங்கள் சபையில், குடியரசு தலைவர் உரைமீது விவாதம் நடைபெற்றபோது, "இந்தியாவின் ஒற்றுமையை வற்புறுத்தும் பொருட்டு, மாநிலங்களை, 'மாகாணம்' என்று அழைக்க வேண்டும்" என்று பல உறுப்பினர்கள் யோசனை கூறியுள்ளார்கள்.

"ஒரு மொழி மாநிலமே நல்லதென்று கம்யூனிஸ்டுகள் கூறுவதற்கு ஏதாவது ஒன்று அல்லது இரண்டு சிறு மாநிலங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றலாமென்ற ஆசைதான் காரணம்" என்று, 'எல்லைத் தகராறுகளுக்குக் காங்கிரஸ்தான் பொறுப்பாளி' என்று கம்யூனிஸ்டுகள் சாட்டிய குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துப் பேசுகையில், ஹெட்டே என்பவர் கூறியுள்ளார்.

அண்ணாமலை நகரில் அண்ணா

துணைப் பொதுச்செயலாளர் நிகழ்ச்சிகள்

மாநில மாநாட்டுக்கு ரூ. 200 நிதியளிப்பு

அண்ணாமலை நகர். தி. மு. கழக மாணவர் கிளை பொதுக் கூட்டம் 22—2—56 மாலை 6 மணிக்கு திருவேட்களை குளக்கரையில் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் சிறப்புற நடந்தேறியது. ஏராளமான மாணவத் தோழர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர்.

மாணவர் கிளையின் செயலாளர் பு. இராமசாமி, அண்ணா அவர்களையும், துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன் அவர்களையும் வரவேற்றுப் பேசினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் பொன் - சொக்கலிங்கம், பாலகுருசாமி ஆகியோர் சிறிதுநேரம் பேசிய பின், தோழர் என். வி. நடராசன் 20-ந் தேதியன்று தமிழகமெங்கும் நடைபெற்ற அர்த்தாலின் வெற்றியையும், அரசியலாரின் போக்கினையும் விவரித்துப் பேசினார்.

அதுசமயம் மேடைக்கு வந்த தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ, அவர்களை பெருத்த ஆரவாரத்திற்கிடையே மக்கள் வரவேற்றனர். 20-ந் தேதி கடலூரில் போலீசார் கையாண்ட அடக்குமுறையையும், தாமும் மற்ற நண்பர்களும் கைதான விவரத்தையும் தோழர் ஏ கோவிந்தசாமி அவர்கள் எடுத்துக் கூறினார்.

பின்னர், மாநில மாநாட்டுநிதிக்கு ரூ 200 கொண்ட பண முடிப்பு மாணவர் கிளையின் சார்பில் அண்ணா அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

இறுதியாக, அண்ணா அவர்கள் சர்வகட்சிக் கூட்டணி ஆற்றியுள்ள மகத்தான சாதனையையும், எதிர்காலத்தில் ஆற்ற வேண்டியுள்ள பணியினையும், அரசியலாரின் பிற்போக்குத் தன்மையையும் விளக்கிப் பேசியதோடு, நிதியளித்தமைக்கு தலைமை நிலையச் சார்பில நன்றியும் தெரிவித்தார்கள்.

அண்ணா அவர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும் பல கிளைகளின சார்பில் சரிகை மாலைகள், கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறுதலுடன் ஆண்டு விழா இனிது முடிவுற்றது.

கொடியேற்றுதல்

பின்னர், அண்ணாமலை நகர் தெற்கிருப்பு திடலில் கழகக் கொடியை அண்ணா அவர்கள் ஏற்றிவைத்தார்.

திரு. வி. க. படிப்பகம்

அடுத்து அண்ணா அவர்கள், தோழர்கள் என்.வி நடராசன், ஏ கோவிந்தசாமி, தில்லை-வில்லாளன் ஆகியோருடன் திரு வி. க. படிப்பகத்திற்கு வருகை தந்து பார்வையிட்டார் படிப்பக நிர்வாகிகள் மாலை அணிவித்து, தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

கருணைக் கழக படிப்பகம்

பின்னர், கருணைக் கழகப் படிப்பகத்திற்கு அண்ணா அவர்கள் மற்ற தோழர்களுடன் சென்று பார்வையிட்டார்.

படிப்பக நிர்வாகிகள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்று உபசரித்தனர்.

அரக்கோணத்தில்

அ. இ. கைத்தறி வார விழா

25—2—56 சனி மாலை 6 - மணிக்கு ஸ்டூவர்ட் பேட்டை எஸ். ஐ. எம். உயர்நிலைப் பள்ளித் திடலில், தோழர் சதாசிவ அய்யர் தலைமையில் நடைபெறும். துணைப பொதுச்செயலாளர் என். வி. நடராசன் பேசுவார்.

சிறை சென்றவருக்குப் பாராட்டும் 'தாயகம்' இதழ் துவக்க விழாவும்

26—2-56 காலை 9 மணியளவில், சென்னை - புதுப்பாக்கம் 38-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், எண். 3 முகமது உசேன் தெருவிலுள்ள கிளைக் கழகப் பணிமனையில், பிப். 20-ல், 'சர்வ கட்சி கூட்டணியின் முதல் முழக்கத்தில் சிறை சென்று மீண்ட தோழர்களுக்குப் பாராட்டும், கிளைக் கழகச் சார்பில் நடத்தப்பெறும் 'தாயகம்' கையெழுத்துப் பிரதி துவக்க விழாவும், தோழர் எம்.கே. சாமி தலைமையில் நடைபெறும். தோழர் மு. புரட்சிமணி 'தாயகம்' இதழைத்துவக்கிவைப்பார். தோழியர் அலமேலு - அப்பாதுரை, நீல நாராயணன், இளம்பரிதி, சே. மு. காதர், க. வீரபாண்டியன் பேசுவர்.

குழப்பங்களுக்கு...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

"மொழிவழி மாநிலங்கள் அமைத்து சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புத் தருவதின் மூலம் தான் இந்தியாவில் 'ஒற்றுமை' யைக் காணமுடியும்," என்றும் ரேணுசக்ரவர்த்தி கருத்தறிவித்திருக்கிறார்.

"பிரிவினை மனப்போக்குகளுக்குக் காங்கிரஸ் மேலிடமே காரணம்" என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இறுதியாகப் பேசிய எச். வி. காமத் குறிப்பிட்டதாவது:—

"பம்பாயிலும், மராட்டியத்திலும் மக்கள் கடுங்கோபத்திற்கு ஆளாகியுள்ளனர்.

"தமிழ் நாட்டில் பெரும் அதிருப்தி நிலவுகிறது.

"ஒரிசாவில் எரிமலை யொத்த அமைதியின்மை நிலவுகிறது; வங்காளத்தில் மக்கள் ஆத்திரப்பட்ட நிலையிலிருக்கின்றனர்.

"பஞ்சாபில் நிலைமை பெரும் கிளர்ச்சியைப் பிறப்பிப்பதாயிருக்கிறது.

"கோவாவில்தான் மரண அமைதி நிலவுகிறது.

"காஷ்மீரில் அடிப்படை சிவில் உரிமைகள் சிறிது சிறிதாக பறிக்கப்பட்டு வருகின்றன.

"எனவே, மாநில புது அமைப்பு குறித்த விவகாரங்களைத் தீர்ப்பதற்கு எல்லாக் கட்சியினரையும் கொண்ட ஒரு மாநாடு நடத்துவதற்குப் பிரதமர் முன்வர வேண்டும்; பிரதமர் இதைச் செய்யாவிட்டால், ஜனநாயகம், மற்றும், புத்தர், காந்தியார் ஆகியோரின் நற்செய்திகள் பற்றி எல்லாம் பேசுவது வெறும் வேஷம்—'ஹம்பக்'!"

கோலாலம்பூர், பிப். 21—

"அடிமை நிலையிலுள்ள நாடுகள் விடுதலை பெறுவதற்குத் துணைபுரிவதற்காக, நிரந்தர நிறுவனம் ஒன்று மலேயாவில் அமைக்கப்படலாம்" என்று முதலமைச்சர் தெங்கு அப்துல்ரெஹ்மான் தெரிவித்துள்ளாராம்.

கலப்புத் திருமணம்

26—2—56 காலை 9 மணிக்கு சென்னை — வியாசர்பாடி கணேசபுரம் லேன், எண் 213 இல்லத்தில், தோழர் கண்ணதாசன் தலைமையில், தோழர் எஸ். சி. சிட்டிபாபு—தோழியர் அன்னம்மாள் கலப்புத் திருமணம் நடைபெறும். தோழர் கு. அறிவழகன் வாழ்த்துரை வழங்குவார்.

அன்று மாலை 6 மணிக்கு அண்ணா அவர்கள், மணமக்களைப் பாராட்டிப் பேசுவார்.

இம்மாத இதழ் விற்பனையாகிறது!

'உரிமைக் குரல்'

தனி இதழ் - விலை 1½ அணா

பிரதி ஒன்றுக்கு 3 அணா கட்டக்கூடிய விற்பனையாளர் மட்டும்எழுதுக.

நிர்வாகி,

'உரிமைக் குரல்',

த. பெ. எண். 1383,

கொழும்பு

கழகக் கூட்டம்

★

செவ்வாய்ப்பேட்டை:

அப்புச் செட்டித் தெரு கழகக் கட்டிடத்தின் முன்பு

26—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
பி. தங்கவேலு

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
ஈ. ஆர். கிருட்டிணன்

★

சென்னை:

39-வது வட்ட தி.மு.க. ஆண்டு விழா — மஜீத் படிப்பகத் திறப்பு விழா

26—2—56 மாலை 6 மணிக்கு

மவுண்ட்ரோடு அப்பாவு கிராமணி தெருவில்

தலைவர்:
ம. சே. பரதன்

பேசுவோர்:
கண்ணதாசன்
டி. கே. சீனிவாசன்
என். ஏ. ரசீத்

தோழியர் அ. மல்லிகா இன்னிசை வழங்குவார்

★

சங்கரநயினார்கோயில்.

26—2—57 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. ஆர். சுப்பிரமணியம்

பேசுவோர்:
இராம. அரங்கண்ணல்
சு. பழனியப்பன்
இரா. பழனிவேலு

★

செவல்குளம்:

(சங்கரன் கோயில் வட்டம்)

27—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. ஆர். சுப்பிரமணியம்

பேசுபவர்:
இராம-அரங்கண்ணல்

பெங்களூர் திரு. வி. க. மன்றம் பொதுக்கூட்டம்

26—2—56 மாலை 5-30 - மணிக்கு, சிவன் செட்டி கார்டனில் (சங்கர நாராயண சபை அருகில்) திரு. வி. க. மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். வி. பதி தலைமையில், திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் சொற்பொழிவாற்றுவார்.

திருக்குறள் வகுப்பு

சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 25-2-56 பிற்பகல் 2-30 மணிக்கு மேல் சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். மயிலை - சிவமுத்து அவர்கள் 'கொடுங்கோன்மை' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.